**செ. கு. எண்**: 151 **நாள்**: 17.04.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 17.4.2012

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், திங்களூர் கிராமம், சுஜ்ஜல்கரை செமுமைத் தொட்டி பகுதியைச் சேர்ந்த திரு. சித்தன் என்பவரின் மகன் சிவாஜி 12.4.2012 அன்று குத்தியாலத்தூர் கிராமம், கிட்டாம்பாளையத்திலிருந்து அணைக்கரைக்கு நடந்து சென்று கொண்டிருந்த போது, காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், ஜெய்புரம் புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கிட்டன் என்பவரின் மகன் மாரன் (எ) மாரப்பா 16.4.2012 அன்று கோவைகுட்டை கிராமத்திற்கு நடந்து சென்று கொண்டிருந்த போது, காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், சேரங்கோடு கிராமத்தைச் சேர்ந்த திரு. கந்தையா என்பவரின் மகன் லட்சுமணன் என்பவர் 17.4.2012 அன்று காட்டு யானை தாக்கியதில், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார், என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த சிவாஜி, மாரன் (எ) மாரப்பா மற்றும் லட்சுமணன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவங்களில் காலமான சிவாஜி, மாரன் (எ) மாரப்பா மற்றும் லட்சுமணன் ஆகியோரின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய் வனத் துறை மூலம் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**